விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 14 ஜுல்ஹஜ் 1 இதழ் 228
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-9-1981

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச்சந்தி
ஆரம்பம்: 3—10—81
A L 82/83
கம்பனிக் கணக்குகள்:- பாலா, பொருளியல்:-குமாரவேல், வர்த்தகம்;- திலகரத்தினம், அளவையியல்: சிவம்
Physiology: சிவ வீரசிங்கம், கரப்பான், குரு, பௌதிக இரசாயனம்: அன்ரன் ஒளி; கலாபரன், தூய/பிரயோக கணிதம்: A. பதமநாதன்,
Spoken English: முத்துலிங்கம்,
Shorthand and Typing,
Book-keeping Tele Communication
Lond-Exam

### விமானக்கடத்தல்:

லாகூர், செப். 29

இந்திய விமானத்தைக் கடத்திய கடத்தல்காரர்கள் 45 பிரயாணிகளை விடுவித்திருப்பதாக இன்றிரவு கிடைத்த கடைசிச் செய்திகள் தெரிவித்தன.

### நன்னீர் மீன் வளர்ப்பு

(புளியங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நன்னீர் மீன் வளர்த்தல் திட்டத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கான அங்கீகாரத்தைக் கடற்றொழில் அமைச்சு வழங்கியுள்ளதென முல்லைத்தீவுமாவட்ட அமைச்சர் ஜனுப் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்தார்.

★ இலங்கைத் தமிழ்மக்கள் பிரச்னை

# ஐ.நா.வில் குரல் எழுப்ப மத்திய அரசை வலியுறுத்துகின்றோம்!

## எந்த வல்லரசையும் நம்பிஇருப்பதில்பலனில்லை

### யாழ்.நகரில் தமிழக சட்ட சபை உறுப்பினர்நெடுமாறன்

[இரத்தினம் கந்தசாமி]

“இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா ஒன்றினுலேயே கொண்டு செல்ல முடியும். எனவே தான் நாம் இப்பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டு செல்லுமாறு இந்திய மத்திய அரசை வலியுறுத்தினேம். தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேம். தமிழகத்தில் கட்சிகள் யாவுமே இவ்விஷயத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன. தமிழக அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, சாதாரண மக்களே இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னையில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதை அண்மைக்காலமாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள காமராஜ் காங்கிரஸ் தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான திரு. பி. நெடுமாறன் என்னிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் நடந்த ஹர்த்தால் இந்திய வரலாறு கண்டிராத நிகழ்ச்சி என்று தெரிவித்த திரு. நெடுமாறன்; ஹர்த்தால்பற்றி மேலும் கூறியதாவது; ''எவருமே எதிர்பார்த்திராத அளவுக்கு இந்த ஹர்த்தால் பூரண வெற்றி அடைந்துள்ளது. இதனுல் தமிழக மக்களின் இன உணர்வை - இலங்கைத் தமிழர்கள்பால் அவர்கள் கொண்டுள்ள பிணைப்பை அறியக்கூடியதாக இருந்து. அன்று தமிழகமே ஸ்தம்பித்திருந்தது.

[8-ம் பக்கம் பார்க்க]

## பாகிஸ்தானுக்கு இந்திய விமானம் கடத்தப்பட்டது!

புதுடில்லி, செப். 29

இந்திய ஏர்லைன்ஸ் 707 ரக போயிங் விமானம் ஒன்று, இன்று இரண்டு கடத்தல்காரர்களினுல் திசைதிருப்பப்பட்டு லாகூருக்கு கடத்தப்பட்டது

இந்த விமானத்தில் நூற்றுப் பதினெரு பிரயாணிகளும் ஆறு சிப்பந்திகளும் இருக்கின்றனர்.

டில்லியிலிருந்து விமானம் புறப்பட்டபோது இன்று பிற்பகல் 12-45க்கு கத்திமுனையில் விமானஒட்டி பயமுறுத்தப்பட்டு லாகூருக்கு கடத்தப்பட்டதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. பாகிஸ்தான் நகரான லாகூரில் இந்த விமானம் தரையிறங்கியபோது பகல் 1-20 ஆகும்.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கடத்தல்காரர்களின் கோரிக்கை சம்பந்தமாக செய்திகள் வெளிவராத போதிலும், இக் கடத்தல

8-ம் பக்கம் பார்க்க]

## நெடுமாறனுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு காங்கிரஸ் [காமராஜர்] கட்சித் தலைவரும், தமிழக சட்டசபை உறுப்பினருமான திரு. பி நெடுமாறனுக்கு யாழ். மாநகர சபை நேற்று தேநீர் விருந்துபசாரம் அளித்து கௌரவித்தது.

யாழ். மாநகர சபை மண்டபத்தில் யாழ். மேயர் தலைமை

[8-ம் பக்கம் பார்க்க]

## கருணுநிதிவிடுதலை

### நாளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு

சென்னை, செப். 29

தி. மு. க தலைவர் திரு மு. கருணுநிதி இன்று விடுதலை செய்யப்பட்டார். இவருடன் தி. மு. கழகத் தொண்டர்கள் 112 பேரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

சென்னையிலுள்ள இலங்கை உதவித்தூதரகம் முன்பாக மறியல்செய்யச் சென்றபோது கடந்த 15ம் திகதி திரு. கருணுநிதியும் மற்றவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இன்று காலை சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட திரு கருணுநிதி, சென்னை இரண்டாவது மாகாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். பிணையில் செல்லுமாறு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், அதனை, திரு. கருணுநிதியின் வழக்கறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டார்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் திரு. கருணுநிதி ஆஜராகவேண்டுமெனறும் நீதிபதி உத்தரவிட்டார்.

இவற்றுக்கெல்லாம் யார் பொறுப்பு?

## யாழ். நகரில் மின்சாரம் சுகாதாரம் சீர்கேடு!

### அதிகாரிகள் மீது சபை உறுப்பினர் சீற்றம்

[ஏ வி மாணிக்கம்]

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரத்தில் மின்சாரம், சுகாதாரம் சம்பந்தமான சீர்கேடுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை என்று திரு என்.ரி. செல்லத்துரை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது குற்றம் சுமத்தினுர்.

மராமத்துப் பகுதியினர் எத்தனையோவேலைகளை உரியகாலத்தில் செய்துமுடிக்காததுடன் வேலைகள் பற்றி எதுவித அறிக்கையும் தரவில்லையென்றும் சுகாதாரப்பகுதியினர், பொதுமக்களின் குறைபாடுகள் எதுவும் நிவர்த்தி பண்ணவில்லை என்றும் திரு. செல்லத்துரை பேசுகையில் எடுத்துக்கூறினுர்.

பொதுமக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றவேண்டும். மலசலகூடங்கள் மிகவும் மோசமான நிலையில் இன்னும் இருக்கின்றன. மின்சாரப்பகுதியிலுள்ள குறைபாடுகள் இன்னமும் நிவர்த்தி செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்ட அவர், இவற்றுக்கெல்லாம் யார் பொறுப்பு? ஆணையாளரா அல்லது உத்தியோகத்தர்களா? என்று கேட்

[8ம் பக்கம் பார்க்க]

யாருடைய “போட்டோஸ்ரட்” யந்திரங்கள் பழுதடைந்தாலும்,
எமது யந்திரம் தொடர்ந்து பணிபுரிகிறது.
துலக்கமான, துல்லியமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு;
மகாராஜா இன்வெஸ்ட்மெண்ட் லிமிட்,
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8267

## மைத்திரி தலைமையிலான

# சுதந்திரக் கட்சியின் போஷகராக சிறிமா!

(கொழும்பு)

திரு. மைத்திரிபால சேன நாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் போஷகராக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டார்.

கட்சித்தலைவராக திரு. மைத்திரிபாலசேன நாயக்கவும், பிரதித் தலைவராக திரு அனுரா பண்டாரநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டனர்.

துணைத்தலைவர்களாக திருவாளர்கள்: பீ பீ ஜி கலுகல்ல, ஸ்டான்லி திலகரத்ன, ஜனாப் ஹலீம் இஷாக், ஆர் பீ விஜேசிறி, டிக்ஸன் சில்வா, எல் கே டீ சூரியாரச்சி, பீ பீ பீ கருணாரத்ன, எஸ் டி எஸ் ஜயரத்ன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் பொதுச்செயலாளராக திரு பெஸில் இராஜபக்ஸ தெரிவு செய்யப்பட்டார்.

திருவாளர்கள்; மகிந்தஜன சிங்க, ஜே ஆர் பி சூரியப் பெரும, சதாதிஸ்ஸ வடுகமகால, ஜனாப் எஸ் ஏ அஸ்வர்மௌலானா, திருமதி குமாரி பாலசூரிய ஆகியோர் உதவிச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பொருளாளராக திரு சுமதிபால ஜெயவர்த்தன தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் யாப்பு விதிகளில் மாற்றங்களை சிபார்சு செய்வதற்கு மூவர் கொண்டகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. திரு ஸ்டான்லி திலகரத்ன, திரு ஹரிச்சந்திரமென்டிஸ், திரு பெஸில் இராஜபக்ஸ ஆகியோர் இக்குழுவின் அங்கத்தவர்களாவர். [வெ]


பட்ஜெட்டுக்கு முந்துங்கள்

சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்

SISIL REFRIGERATORS

- ★ ஒரு வருட தயாரிப்பாளரின் உத்தரவாதம்
- ★ எல்லா உறுப்புகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ மிகக்குறைந்த விலையில் ஒருசிறந்த பொருள்
- ★ திருத்துதல், பெயின்ற் அடித்தல்


திறமான முறையில் வெகு விரைவில் நியாயமான செலவில் பயிற்சி பெற்ற வேலையாட்களால் செய்து கொடுக்கப்படும்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

சிலோன் மேர்ச்சன்ஸ்லிமிற்

484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.






சக்தி செறிந்த

ஃபைசர்

பிறிமிக்ஸ்'ஏ'

கலவைகள்

- வளர்ப்புக் கோழிகளுக்கு ப்றீடர் பிறிமிக்ஸ் 'ஏ'
- இறைச்சிக் கோழிகளுக்கு ப்றெயிலர் பிறிமிக்ஸ் 'ஏ'
- முட்டைக் கோழிகளுக்கு லேயர் பிறிமிக்ஸ் 'ஏ'

500 கிராம் பக்கெட் விலை ரூ. 28/- முதல் ரூ. 42/- வரை.

புதிதாகத் தயாரித்த கலவைகள் என்பதால் சத்துக் குறையாமல் உடன் தயாரிப்பின் உத்தரவாதமாக பயன் உங்கள் கோழிகளுக்குக் கிடைக்கும் இட்டிய கோழித் தீன் வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்

விசாரணைகள்

Pfizer ஃபைசர் லிமிட்டெட்

688, காலி வீதி, ரத்மலானை.

277, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.


# தாலிக்கொடி அறுத்த மூவரில் ஒருவர்பொலிஸில்!

(மாவிட்டபுரம்)

பெண் ஒருவரது தாலிக் கொடியை அறுத்த மூன்று நபர்கள் பொது மக்கள் துரத்தியதும் அறுத்த தாலிக்கொடியையும் தம்மிடமிருந்த மற்றொரு போலி தாலிக் கொடியையும் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். மூவரில் ஒருவர் மட்டும் பிடிபட்டுக் கொண்டார்

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த செல்வநாயகம் தவமணிதேவி என்னும் பெண் வீட்டில் தனித்திருந்த சமயம் அங்கு வந்த மூவர் கையில் போலித் தாலிக்கொடி ஒன்றைக்காட்டி நகை செய்பவரான இப்பெண்ணின் கணவர் மூலம் இதனை விற்க வந்ததாகக் கூறினராம் கணவர் வீட்டில் இல்லை என்று அவர் கூறவே அதனை நிறுத்துத் தருமாறு கேட்டனராம்

அச்சமயத்தில் திடீரென ஒருவர் பெண்ணின் மீது பாய்ந்து அவரது கழுத்திலிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அறுத்தாராம். மற்றொருவர் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினாராம்.

இப்பெண் கூக்குரலிடவே பொது மக்கள் கூடி திருடர்களைத் துரத்தினர். அச் சமயம் அவர்கள் அறுத்த தாலிக்கொடியையும் தம்மிடமிருந்த போலித் தாலிக் கொடியையும் போட்டுவிட்டு ஓடினராம் பொன்னுத்துரை பிரபாகரன் என்ற நபர் மட்டும் பிடிபட்டுக்கொண்டார். இவர் காங்கேசன்துறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்

மேலும் சிவலிங்கம் சுதாகரன், இராசா விக்னேஸ்வரன் ஆகிய இருவர் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வருகிறார்கள். [அ

## மாநாடு கூட்டமுடிவு

(யாழ்ப்பாணம்)

கல்வி வெள்ளை அறிக்கை தொடர்பாகக் கல்விமான்கள், ஆசிரியர்கள் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்ட இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் மாவட்டக்கிளைகளினதும் ஆலோசனையும் கோரப்பட்டுள்ளது. [மா]

## திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைத் திருட்டு வழக்கில் எதிரியான தொழிற்சாலை ஊழியர் விடுதலை செய்யப்பட்டார்.

முத்துக்குமாரு கனகரத்தினம் என்ற இவ்வூழியர் தொழிற்சாலையிலிருந்து 200 ரூபா பெறுமதியான செப்புக் கம்பியைத் திருடியதாகக் குற்றம்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டசமயம் சீமெந்து தொழிற்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தரான கந்தையா தர்மலிங்கம் சாட்சியளித்தார்.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பு வழங்கினார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்:

வழக்காளி தரப்பில் காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்டபின் மயில்வாகனம் வழக்கை நடத்தினார்.

## ஐம்பதுக்கு மேற்பட்ட சைக்கிள்கள் தேவையாம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைப் பகுதியின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் 50 பேருக்குமேல் சைக்கிள் வழங்க வேண்டியநிலை இருப்பதாக சமூக சேவைப் பகுதி அத்தியட்சர் திரு. ரி செல்வநாதன் தெரிவித்தார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த கல்லூரி மாணவரான நடராசா தவராசா (23 வயது) என்ற கால்கள் ஊனமுற்ற வாலிபருக்கு, யாழ். செயலகத்தில்வைத்து சைக்கிள் வழங்கியபோது எமது நிருபருக்கு இத்தகவலை அவர் தெரிவித்துள்ளார்

ஊனமுற்றவர்கள் நடமாடித் திரிவதற்கு சைக்கிள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது என்று சொன்ன திரு செல்வநாதன், இதுவரை 25 பேருக்கு இருபோக்ற சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சைக்கிள் வழங்குவது ஒருஆரம்பக்கட்டம் என்றும், புனர்வாழ்வுத்திட்டத்தின்கீழ் ஒருவருக்கு தொழில் பயிற்சிபெற 5 ரூபாவும், சுயமுயற்சிக்கு 750 ரூபாவும் வழங்கவுள்ளதாகவும் கூறினார். (மா]

## கைமேல் பலன்

(மன்னார்)

'ஈழநாடு' பத்திரிகையில் அண்மையில் வெளியான செய்தியைத் தொடர்ந்து பேசாலை ரயில் நிலையத்திற்கான பெயர்ப் பலகைகள் ரயில் நிலையத்தின் இருபக்கங்களிலும் இணைக்கப்பட்டுள்ளன.

பேசாலை ரயில் நிலையத்தில் பெயர்ப்பலகை இல்லாததால் பேசாலைக்குப் புதிதாகவரும் பிரயாணிகள் இதுவரை அவதியுற்றுவந்தனர். இப்போது இக்கஷ்டம் நீங்கியுள்ளது.

## இஸ்ரேல் இடைநிறுத்தம்

வியன்னா, செப் 29

அணுசக்தி உற்பத்தி நாடுகளின் சம்மேளனத்திலிருந்து இஸ்ரேல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வியன்னாவில் கூடிய அணுசக்தி உற்பத்தி நாடுகளின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

27 நாடுகள் பங்குபற்றிய இம்மாநாட்டில் அமெரிக்கா இத்தீர்மானத்தை எதிர்த்தது.

ஈராக் அணுஆலைகள் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இம் மாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. (கு)

## இடமாற்றம் ரத்து

(உடுப்பிட்டி)

யாழ் கல்வித் திணைக்களத்திலிருந்து திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட யாழ் உடற்கல்வி அதிகாரி திரு. தங்கராசாவின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகக் கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது கல்வியதிகாரி திரு. தங்கராசா கடந்த மாதம் 15ந் திகதி முதல் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றிருந்தார்.

## ஒத்திவைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெறவிருந்தது. உறுப்பினர்கள் போதியளவு சமூகமளிக்காததால் இக்கூட்டத்தை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பி நவரத்தினம் காலவரையின்றி ஒத்திவைத்தார். (வெ.

# வரி விளம்பரம்

### FOR SALE

Pedigree Dachshund Pups for Sale 6 week old Dr. Anandarajaa, 200, Kasturiar Road, Jaffna Tel. 7533. 1095

### விற்பனைக்கு

விரைவாகவும் கூடுதலாகவும் பயன்தரக்கூடிய நல்லினத் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற் - யாழ்ப்பாணம். 1086

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகாமையில் இல 35 கோவில் வீதி கொக்குவில் கிழக்கில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் S. துரைராசசிங்கம் இல 35 கோவில் வீதி, கொக்குவில். 1080

ஆனைக்கோட்டை குளப்பிட்டி ஆனைக்கோட்டை தெருவில் ஆனைக்கோட்டை சந்தியில் இருந்து 100 யாருக்கு உள் பதினொரு (11) பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி; தெருவிற்கு வடக்குப்பக்கமாக. சிறு துண்டுகளாகவும் கொடுக்கப்படும் பொன்னுத்துரை பூபேந்திரநாதன், C/o இளைத்தம்பி, சண்முகம்ஸ் மோட்டர் கராச். ஆனைக்கோட்டைசந்தி, பழைய டச் தெரு, ஆனைக்கோட்டை. 1094

### தேவை

தேநீர்க் கடைக்கு எல்லா வேலைகளும் தெரிந்த ஓர் ஆள் தேவை. 2, 3 வருட அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. ராஜு விலாஸ், இல: 194, தபாற்கந்தோர் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். 1093

யாழ்ப்பாணத்தில் அலுமினியப் பாத்திரங்கள் கொள்முதல் செய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை. பகுதி நேரமாகவும் இருத்தல் முதலிடம் கொடுக்கப்படும். தொடர்பு; விளம்பர இல: 1096, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1096

யாழ்.வை எம்.ஸி.ஏ.

## புதிய கட்டிடம் திறக்கப்பட்டது

(அரியாலை)

உலகம் முழுவதிலும் பரந்திருக்கும் வை. எம் ஸி. ஏ ஸ்தாபனம் சமயப்பணியுடன் சமூகப் பணியையும் திறம்படச் செய்து வருகிறது. யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. ஸ்தாபனம் யாழ்ப்பாணத்திலுள்ள சகல பிரிவினரிடையேயும் சமூகப் பணிகளைத் திறம்பட நடத்தி வருவது பாராட்டுக்குரியது. வாலிபர்களுக்குத் தொழிற் பயிற்சியையும் விளையாட்டுத்துறைப் பயிற்சியையும் வளர்க்க இந்த மண்டபம் மேலும் உதவும் என்று யாழ்ப்பாணம் வை. எம் ஸி ஏ ஸ்தாபனத்தால் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட தொழிற்சாலை, நூல்நிலையம், பயிற்சி நிலையம் தேவாலயம் ஆகியவைகளைக் கொண்ட புதிய மண்டபத்தைத் திறந்து வைத்த உலக ஐக்கிய கிறிஸ்தவ சபைகளின் குருத்துவ செயலாளர் அருட்திரு கலாநிதி ரெக்ஸ் மூக் அடிகளார் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் வை எம் ஸி ஏ ஸ்தாபன தலைவர் திரு ஜே எம் சபாரத்தினம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது

### மணிவாக்கு

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு மேல் பைபிள் எழுதப்பட்ட நூலாகவிருக்கிறது; இருப்பினும் சட்டவியல் என்னும் சாத்திரத்துக்கு அது ஊட்டும் ஒளியைப் பெறக்கூடிய ஆத்மீக ஞானமும் நடைமுறை உணர்வும் ஒருங்கே பெற்ற சட்டநிபுணரை நாம் இதுவரை கண்டதுண்டோ? —ஹென்றி தோரோ

# நமது நோக்கு

## துப்பாக்கி முனை

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்ற மூதாட்டியின் முதுமொழிக்கு இன்று எதுவித அர்த்தமுண்டா?

செஞ்சீனவை உருவாக்கிய அதிமனிதன் மாசேதுங் கடைப்பிடித்த கொள்கை: துப்பாக்கி முனையில் அதிகாரம் பிறக்கின்றது. இதுவே புரட்சி மூலம் கட்டியெழுப்பிய நவசீனத்தின் மூலமந்திரமென்று கொள்ளப்படுகிறது.

ஆசியாவின் அடுத்த பெரும்நாடாகிய ஜனநாயக சோஷலிச இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தி இதற்கு நேர்மாறான கொள்கையை தம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் இம்மியளவும் விலகாமல் இறுகக் கடைப்பிடித்தார். நாம் எந்த உயிர்க்கும் எப்போதும் மனத்தினாலும், ஒரு சிறிய தீங்கும் செய்தல் கூடாது என்பதே அந்தக் கொள்கை. அது முனிவரின் கொள்கையென்பதை அவருடைய குறள் வற்புறுத்துகின்றது.

"எனைத்தானும்
எஞ்ஞான்றும் யார்க்கும்
மனத்தானும் மாணா
செய்யாமை"

அகிம்சை என்பது ஓர் அரும்பெரும் கொள்கை நெறி. அதனை முதன்முதலாகக் கண்ட இந்திய ஞானிகள் நியூட்டனை விட மிகச் சிறந்த மேதைகள்; நெப்போலியனையும் வெலிங்டனையும் விட மிகப்பெரிய வீரர்கள்.

நாம் இதனை வற்புறுத்த தகுந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

புரட்சிமூலம் கொடுங்கோல் ஆட்சியை அகற்றிய பெருமை ஐரோப்பாவின் அரும்பெரும் தேசமான பிரான்சையே சாரும். அரசியல் ஞானிகளால் ஆத்மீகத் தலைவர்களால் செப்பனிடப்பட்ட பிரெஞ்சுப் புரட்சி இயக்கம் பிரான்சுக்கு ஒரு மக்கள் ஆட்சியை, ஒரு குடியரசை அளித்தது.

கொடுங்கோல் மன்னனும் அவருடைய மகாராணியும் தூக்கிலிடப்பட்டனர். பாண் துண்டு ஒன்று பசிக்குக் கிட்டாத ஏழைமக்கள் பதைபதைத்த போது, 'கேக்' சாப்பிடலாமே யென்ற யோசனை சொல்லிய மகாராணி அவர்; தூக்கு மரத்திலிடுவதை விட இக்கொடிய ஆட்சியை நடத்திய அரசனுக்கும் மகாராணிக்கும் வேறெந்தவிதத்திலும் தண்டனையளிப்பது பொருத்தமில்லையென்று கொள்ளப்பட்டது.

தூக்குமரம் (Guillotine( என்ற பதம் அப்போதுதான் உபயோகத்தில் வந்தது. வன்முறைப் புரட்சியின் தேசத்துரோகிகள் என்று காணப்பட்டவரெல்லாம் மேடையிற் பலியானார்கள்

1789ம் ஆண்டு முதன்முதலாக உபயோகத்திலிருந்து வந்த தூக்கு மரத்துக்கு இன்று ஆட்சி நடத்தும் சோஷலிச ஜனாதிபதி மித்தெரான்ட் அவர்கள் ஓய்வு [ஓய்வூதியமல்ல] வழங்கியுள்ளார்.

மூதாட்டியின் ??? அருளுரைக்கு உடன்பாடான பிரெஞ்சு சோஷலிச ஜனாதிபதி தமது செங்கோல் மூலம் மரணதண்டனையை பிரான்ஸில் நீக்கியுள்ளார்.

புத்தபிரான் அவதரித்த புண்ணிய பூமியாகிய ஜனநாயக இந்தியாவிலும், அம்மகான் அடியெடுத்து வைத்த இலங்கையிலும் 'மனிதராய்ப்' பிறத்தல் அரிதா? இது இன்று விசனத்துக்குரிய வினா.

வன்செயலைத் தூண்டி, எடுத்ததெல்லாவற்றிற்கும் துப்பாக்கியை நீட்டுவதால், நாடு முழுவதுமே ஒரு தூக்குமேடையாகக் காட்சியளிக்குமல்லவா?

சட்டத்தை மீறி, தீவைத்தல், துப்பாக்கியினால் கொலை செய்தல், கொள்ளையடித்தல், பொதுச் சொத்துக்கு பாரிய சேதம் செய்தல் - இவ்வகை வன்செயல்களைத் தடுக்கவும் தண்டிக்கவும் துப்பாக்கியைவிட வேறு என்ன வழி இருக்கிறது?

அதை நாம் கண்டிக்க முற்படவில்லை. இது அரசுக்கு விடும் சவால் மட்டுமல்ல; எங்கள் பண்பட்ட வாழ்க்கைக்கு உண்டான அபாயம்

நாடுமுழுவதிலும் குறிப்பாக வடபகுதியில் முகமூடி அணிந்த கோஷ்டிகள் பெருங் கொள்ளைக்கும், கொலைக்கும், இவ்வித கொலை செய்யும் ஆயுதங்களை எவ்வித அச்சமுமின்றி திட்டமிட்டுக் கொண்டு திரிகின்றனரே! இவற்றைத் தடுத்து நிறுத்தும் வழிகளை அரசு மட்டுமல்ல பொதுமக்கள் கண்டு பிடிக்கவேண்டும்.

துணிவுடன் இவ்வித அக்கிரமங்களை ஈன இரக்கம் இல்லாமல் தொடர்ந்து செய்பவர்கள் இதில் உருசி கொண்டவர்கள். இக்கூட்டத்தினரை நாடெங்கிலும் வேருடன் அறுத்தெறிவதே இன்றைய அரசின் முதற் கடமையென்று சொல்லலாம். மக்கள் துணிவுடன் உதவ முன்வரவேண்டும்.

உயிரைப்பணயம்வைத்து எத்தனை குடும்பங்கள் தங்கள் பெருந்தொகையான காசு, நகை நட்டு எல்லாவற்றையும் கொள்ளைக்காரரின் சவாலுக்கஞ்சி தினசரி தாரைவார்த்துக்கொடுக்கின்றனர்.

தேசியரீதியில், பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் கொண்ட உயர்மட்ட ஸ்தாபனம், நாட்டின் மூலைமுடுக்குகளில் தொழிற்படக்கூடிய கிளைகளை உருவாக்குதல் அவசியம்.

## கொழும்பில் ஸ்கொட்லண்ட் நிபுணர்கள்

[கொழும்பு]

எலிசபெத் மகாராணியின் இலங்கை விஜயத்தை ஒட்டி 'ஸ்கொட்லாண்ட்யாட்' துப்பறியும் நிபுணர்களும், பக்கிங்காம் அரண்மனை உயர் உத்தியோகத்தர்கள் குழுவும்

[8-ம் பக்கம் பார்க்க]



## தேவியைத் துதிப்போம்

முன்னொரு சமயம் எங்கும் பஞ்சம் உண்டானபோது கௌதம முனிவர் தேவியைத் துதித்து அவளிடம் ஒரு பாத்திரம் பெற்று, வந்தவர்களெல்லாம் வயிறார உணவு நல்கினர். ஆடையாபரணங்களை உதவினார். தேவியின் இருப்பிடம் உயர்ந்த உலகம். அது சத்திய லோகம், வைகுந்தலோகம், கைலாசம் ஆகிய மூன்று உலகங்களுக்கும் மேலான சர்வலோகம் சர்வலோகத்தில் தேவியின் இருப்பிடம் மணித்தீபம் எனப்பெயர் பெறும் என்பர்.

தேவியின் இருப்பிடத்தின் சூழலிலேயே அறுபத்துநான்கு கலாசக்திகள் இருக்கின்றனர். பிங்களாட்சி, விசாலாட்சி, சம்சித்தி, அபிக்யா, மாயா, சாவித்திரி, காயத்திரி, விமலா, அமலா, அருணீ, ஆருணீ, விக்ருதி சந்தியா, மாதா, சதீ, பக்வதீ, தேவசீ, அநங்கா முதலிய திருநாமங்கள் அவர்களுக்கே உரியதாகும்.

தேவியின் இருப்பிடத்தில் சக்திமிகுந்த ஆயுதங்களும் உண்டு. வித்யா, புஷ்டி, ருத்ரா, வீர்யா, நந்தா, காலராத்ரி, சிகண்டிநீ, இந்திராணி, ருத்ராணி முதலானவர்கள் எல்லா அண்டங்களையும் ஒரு நொடிப்பொழுதில் அழிக்கும் ஆற்றல்வாய்ந்தவர்கள். அங்கே பதினாறு பேறுகளுக்கும் உரிய சக்திகளின் இருப்பிடங்கள் நிரம்பிய பொலிவுடன் பூரித்துள்ளன. காராளி, விகராளி, உமா, சரஸ்வதி, உஷா, லட்சுமி, மேதா, மதி, சாந்தி, ஆர்யா என்பனபோன்ற திருநாமங்கள் அவர்களுக்குரியனவாகும்.

க. சி. குலரத்தினம்

## காரைநகர் இ.போ.ச.ஊழியர் அகதிகளுக்கு நிதி உதவினர்

[சுழிபுரம்]

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக காரைநகர் டிப்போ இ.போ.ச. ஊழியர்கள் 1,745 ரூபாவைக் கையளித்துள்ளனர்.

டிப்போ ஊழியர்கள் குழு காப்பாளர் திரு. ந. கனகரத்தினம் தலைமையில் சென்று திரு. அ. அமிர்தலிங்கத்தின் மூளாயிலுள்ள இல்லத்தில்வைத்துப் பணத்தைக் கையளித்தனர். இந் நிதியை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் கையளித்து உரிய பற்றுச் சீட்டை அனுப்பிவைப்பதாக அமிர் தெரிவித்தார், [அ]

## இடமாற்றம் ரத்து

[உடுப்பிட்டி]

யாழ். கல்வித் திணைக்களத்திலிருந்து திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். உடற்கல்வி அதிகாரி திரு. வே. தங்கராசாவின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்திருக்கிறது. கல்வி அதிகாரி திரு. தங்கராசா கடந்தமாதம் 15ம் திகதிமுதல் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றிருந்தார்.

## 'ஈழநாடு' கள ஆய்வுக் குழுவின் நேரடி கண்டுபிடிப்புகள் - (1)




[4]

புள்ளிகள் கூறும் கதை என்ன என்பதை அறிய முன்னர் 'சீ-நோரி'ல் [காரைநகர்] அண்மையில் நிகழ்ந்த சம்பவமும், அதன் எதிரொலி எத்தன்மையான பயத்தை அங்கு ஏற்படுத்தியுள்ளதென்பதையும் முதலில் அறிந்து கொள்வது பலனுள்ளதாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

காரைநகர் சீ-நோரிலிருந்து சொத்துக்கள் மெல்ல மெல்ல மற்றைய இடங்களுக்கு நகர்த்தப்பட்டதும், சில பகுதிகள் திடீர்திடீரென்று மூடப்பட்டதும், வேலைநீக்கம் அடிக்கடி தலைதூக்கியதும் தொழிலாளர்கள்-ஊழியர்கள் மத்தியில் ஒரு பீதியை உண்டாக்கியது; ஒரு புதிராகத் தோன்றியது.

இவற்றுக்கு சிகரம் வைப்பது போல இம்மாதம் 12, 13ம் திகதிகளில் நிகழ்ந்த சம்பவங்கள், பயமுறுத்தல்கள்... இப்பாரியதிட்டம் விரைவிலேயே இடம்மாறிவிடுமோ என்ற பயத்தை தொழிலாளர்கள், ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தியதென்று எமக்குத் தெரிவிக்கப்பட்டதில் நியாயமில்லை என்று கூறிவிடமுடியாது.

இது சம்பந்தமாக சீ-நோரில் இயங்கும் மூன்று தொழிற்சங்கங்களும், தலைமைப்பீடத்துக்கு கூட்டாக விடுத்திருந்த மகஜர் கவனிக்கத்தக்கது.

இடங்களுக்கு எடுத்துச்செல்ல முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தியபோது காரைநகருக்குத் தேவைப்பட்ட பொருட்கள் அகற்றப்பட்டன. [கொண்டு செல்லப்பட்டன] பகுதித் தலைவர்கள் தம்து பகுதிக்குத் தேவையான பொருட்களை உறுதிப்படுத்த முன்னர், அவ்வப்பகுதிகளுக்குத் தேவையான பொருட்களை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுமில்லாமல், காரைநகர் திட்டத்துக்குத் தேவையான பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டன

"இப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கு வாகனம் சரியான முறையில் ஒழுங்கு செய்யப்படாமல், பகுதித் தலைவர்களின் அங்கீகாரமின்றி, அத்துமீறி - பலாத்காரமாக சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் வீடுகளுக்கு இரவு நேரத்தில் ஜீப்பில் சென்று இனம் தெரியாத நபர்களால் அவர்கள் வற்புறுத்தி அழைக்கப்பட்டதுடன், உரிய அதிகாரிகள் சொல்லாமல், இனந்தெரியாத நபர்கள் களஞ்சியப் - பொறுப்பாளர்களின் வீடுகளுக்குச் சென்று பலதடவைகள் பயமுறுத்தி அழைத்திருக்கின்றனர்.

"பகுதித்தலைவர்களின் அனுமதியின்றி வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, இந்த வாகனங்களில் ஏற்றப்பட்ட பொருள்களைச் சேதப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்

### சீ-நோர் எதிர் காலம்: சிந்திப்பதில் அர்த்தமுண்டு

[குறிப்பு: இங்கு எதிரும் புதிருமாக இயங்கும் மூன்று தொழிற்சங்கங்களும் முதல் தடவையாக இவ்விதம் ஒருங்கிணைந்து மகஜர் சமர்ப்பித்தது ஒரு 'அதிசயம்' என்று வர்ணிக்கப்பட்டபோதிலும்; இந்த மகஜர் சமர்ப்பிக்கப்படுவதற்கு அங்குள்ள தன்மையான சூழ்நிலை தோன்றியிருக்கலாமென்பதை சற்று சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்].

கொழும்பில் இயங்கும் சீ-நோர் நிறுவனத் (தலைமைப் பீடத்து) தலைவருக்கு, மூன்று தொழிற்சங்கங்களின் காரைநகர்க் கிளைகள் [1] இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், [2] இலங்கை எஞ்ஜினியரிங் தொழிலாளர் சங்கம், [3] ஜாதிக சேவைய சங்கம் ஆகிய மூன்றும் அனுப்பிய மகஜர் இதுதான்:-

"இம்மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் சீ-நோர் காரைநகருக்குச் சொந்தமான களஞ்சியங்களிலிருந்து சொத்துக்களை கொழும்பு, மாத்தறைபோன்ற

பட்டன.

"பதின்மூன்றும் திகதி காலை தொழிற்சாலை எல்லைக்குள் உயர் அதிகாரிகளை அனுமதிக்காது பாதுகாப்புக் காவலர்கள் அவர்களை அவமதித்துள்ளனர். இதனுடன், வழக்கமாக எடுத்துச் செல்லப்படும் நுழைவு அனுமதிப்பத்திர விதிக்கு முரணாக, திடீரென புதிய நுழைவு அனுமதி முறை அமல்படுத்தப்பட்டது."

இவ்விதமாக பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, இது குறித்து உடனடியாக நடவடிக்கைஎடுக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரியதுடன்; சில யோசனைகளையும் தலைமைப் பீடத்துக்குத்தெரிவித்துள்ளன

தொடர்ச்சியாக பல ஆண்டுகள் கடமையாற்றி சில சோதனைகளையும் கண்டுவிட்ட காரைநகர் சீ-நோர் தொழிலாளர் - ஊழியர்களுக்கு, புதிதாக திடீர் திடீர் என்று தலைதூக்கும் சம்பவங்கள் நிச்சயம் பீதியைத் தோற்றுவிக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியுமா?

[தொடரும்]

# "மைத்திரி கூட்டம் சட்டவிரோதமானது!"

### திருமதி சிறிமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவியாக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (சிறிமாபிரிவு) நிருவாகக்குழு கூட்டம் கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள கெய்சின் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவராக திரு. ரி. பி. இலங்கரத்னவும், பொதுச் செயலாளராக திரு இரத்தின சிறிவிக்கிரம நாயக்காவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் கூறியதாவது;

"மைத்திரிபால சேனநாயக்கா குழுவினரின் கூட்டம் சட்டவிரோதமானது. கட்சி அமைப்புக்கே எதிரான அதன் முடிவும் சட்டபூர்வமற்றதாகும். போஷகராக என்னைத் தெரிவுசெய்துள்ள அவர்களின் கூட்டம்பற்றி எனக்கே அறிவிக்கவில்லை.

"சாதாரண மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுப்பதே எனது இலட்சியமாகும். அதற்காகத்தான் இத்தனை சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கிக் கொண்டிருக்கிறேன். அடுத்த பொதுத்தேர்தலில் அமோக வெற்றிபெற்று மக்களின் வாழ்வை மலரச் செய்வோம்'' என்றார்.

கட்சியின் உபதலைவர்களாக திருவாளர்கள்; ஹெக்டர் கொப்பேகடுவ, கே. பி. இரத்நாயக்கா, வி. டபிள்யூ. குலரத்தின, இரத்தினதேசபிரிய சேனநாயக்கா, கே. சண்முகலிங்கம், தர்மதாசவன்னியாராச்சி, ஜனாப். எம். எம். மஹ்ரூப், திரு. டி. எம். ஜயரத்தின ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

உபசெயலாளர்களாக திருவாளர்கள்; டபிள்யூ. எம். கருணாரத்தின, பிரேமதாசா உடாகம, சூரியபுலேகொட, இந்திரபால அபேவீர விஜயகுமாரதுங்க ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த 17 பேர் அடங்கிய அமைப்பே கட்சியின் மத்திய செயற்குழுவாக இனிமேல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

## இஸ்ரேல் இடைநிறுத்தம்

வியன்னா செப் 29

அணுசக்தி உற்பத்தி நாடுகளின் சம்மேளனத்திலிருந்து இஸ்ரேல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வியன்னாவில்கூடிய அணுசக்தி உற்பத்தி நாடுகளின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. 27 நாடுகள் பங்குபற்றிய இம் மாநாட்டில் அமெரிக்கா இந்த தீர்மானத்தை எதிர்த்தது.

ஈராக் அணு ஆலைகள் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இம் மாநாட்டில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கு

## இளைஞர்கள் கோவில் அமைத்தனர்

(கோண்டாவில்)

குளப்பிட்டி இளைஞர்களின் முயற்சியினால் காளி கோவில் ஒன்று உருவாக்கப்பட்டு விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. (அ)


## பண்ணை வளர்ப்புத் திட்டம்

மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களில் பண்ணை வளர்ப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படும். இத்திட்டத்தில் வாழ்க்கைத்தரம் குறைந்த 40 குடும்பங்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இதற்கான நடவடிக்கைகளை கிராம அபிவிருத்தி இலாகா மேற்கொண்டு வருவதாக மன்னார் மவட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் மேற்பார்வை அதிகாரி திரு. ஜே. ஜே. தேவசகாயம் தெரிவித்தார்.

இப் பண்ணை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடு, மாடு, பன்றி கோழி வளப்பு என்பன ஆரம்பிக்கப்படும்.



வவனியாவுக்கு வருகைதந்த மன்னார் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, ஊர்வலமாக அழைத்து வரப்படுவதைக் காணலாம். ஆயரின் வலது புறத்தில் வவனியா பங்குத் தந்தை அருட்திரு. அல்பர்ன் ராஜசிங்கம் அடிகளும் இடது புறத்தில் மன்னார் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட்திரு. தேவராசா அடிகளும் காணப்படுகின்றனர்.

## கார் விபத்தில் வயோதிபர் பலி!

(சாவகச்சேரி)

சங்கத்தானையில் நடந்த கார் விபத்தில் 80 வயதான வயோதிபர் பலியானார்.

சங்கத்தானையைச் சேர்ந்த மாரிமுத்து ஆச்சிமுத்து என்பவரே மரணமானவராவர்

சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் தமது வீட்டிலிருந்து புகையிரத பாதையை கடந்து பின் கண்டி வீதியை கடக்கும் போதே காரினால் மோதப்பட்டதாக விசாரணையில் கூறப்பட்டது.

உடனடியாக அவ்வழியாக வந்த லொறியொன்றில், ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு மரணமானார். கார் சாரதி தலைமறைவாகி விட்டார். கார்சாரதியை கைது செய்து சாவகச்சேரி நீதிபதி முன் ஆஜர் செய்யுமாறு மரண விசாரணை அதிகாரி கட்டளையிட்டார். வைத்திய அதிகாரி டாக்டர் கே. சண்முகநாதன் பிரேதபரிசோதனை செய்தார்.

விசாரணையின்பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது (க)


# A. BAUR & CO. LTD.

(Jaffna Branch)

# ஏ. பவர் அன் கோ லிமிட்டெட்

நிறுவனத்தினரின் யாழ்ப்பாணக் கிளையில்

உற்பத்திப் பொருட்கள்:-

★ விவசாய இரசாயனப் பொருட்கள் ★ தெளி கருவிகள் ★ உர வகைகள்

இறக்குமதிப் பொருட்கள்:-

★ மருந்து வகைகள் (சுவிர்சலாந்து) ★ இயந்திர தெளிகருவிகள்

★ விவசாய கிருமி நாசினிகள்

★ ஓவல்ரின் (Ovaltine) ★ ஓவாமில் (Ovamil)

விநியோகஸ்தர்கள் :

★ இலங்கை அரச மருந்து கூட்டுத்தாபனம் ★ இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்

★ இலங்கை தோல் கூட்டுத்தாபனம் (D I)

★ **HONDA** மோட்டார் சைக்கிள்கள் ★

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15-ம், திகதிக்குமுன் எம்மிடம் **HONDA** மோட்டார் சைக்கிள்கள் வாங்குவோருக்கு ரூபா 1035/க்கும் மேலான பெறுமதியுள்ள பொருள்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் மேலதிக சலுகைகளும் உண்டு.

இலவசப் பொருட்கள்:-

★ நம்பர் பிளேற், ★ ஓராண்டு மோட்டார் சைக்கிளுக்கான வரி,
★ நோலான் தலைக் கவசம், ★ நோலான் தலைக்கவசக் கண்ணடி,
★ பொருட் பை. ★ பொதி சுமக்கும் இணைப்பு.

(Nolan N/01 Helmet, Nolan Visor, Luggage Carrier, Pannier Bag, Number Plate, and one year Revenue Licence.)


விபரங்கட்கு:

ஏ. பவர் அன் கோ லிமிட் (யாழ்ப்பாண கிளை)
இல. 5, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்,

A Baur & Co. Ltd. (Jaffna Branch)
No. 5, Clock Tower Road,
JAFFNA.

T'Phone: 7651, 7156

(1092)



வசாவிளானில், தன்னியக்க முறையில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ் தொழிற்சாலையை, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா திறந்து வைக்கிறார். இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. சு. வே. முத்துக்குமாரசுவாமி உற்பத்தியை ஆரம்பித்து வைக்கிறார்

# ‘கண்ணகி மாதவி இருவருமே கோவலன் சிறப்புக்குக் காரணம்”

## நல்லை கம்பன் விழாவில் தமிழகப் பேராசிரியர்

(சுண்டிக்குளி)

“ஐம்புலன்களுக்கும் ஒரே நேரத்தில் இன்பம் கொடுக்கக்கூடிய பொருள் ஒன்றுமே இல்லை. உண்மையான அன்பும் பாசமும் கொண்ட கணவன் மனைவிக்கிடையேதான் இப்படியான இன்பப் பெருக்கு ஏற்பட முடியும். சிலப்பதிகாரத்தில் வரும் இரு காப்பியத் தலைவிகளும் கற்பொழுக்கத்தில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர். கோவலனின் சிறப்புக்குக் கண்ணகி, மாதவி இருவருமே காரணமாவர்.”

மேற்கண்டவாறு நேற்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் ‘கோவலன் குற்றவாளி’ எனத் தொடரப்பட்ட வழக்காடு மன்றத்துக்கு நீதிபதியாகக் கடமையாற்றிய பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் கூறினார். திரு. மு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெற்ற இவ் வழக்காடு மன்றத்தில் கோவலன் ‘குற்றவாளி அல்ல’ என்று தீர்ப்புக் கூறிய பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில், ‘கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்த கோவலன் பக்கத்துத் தெருவில்தான் மாதவியுடன் இருந்தான். அப்படியிருந்தும் தன் கணவனின் இன்பத்துக்கு இடையூறு செய்யக் கண்ணகி விரும்பவில்லை. அவள் தன் கணவன் மீது வைத்திருந்த அன்பு கடந்த பக்திக்கும் அன்புக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு’ என்றார்.

இப்பிரச்னையில் யார்மீதும் குற்றம் காண முடியாது இளங்கோ. விதியின் பயனுக்கே கோவலன் மாதவியைப் பிரிந்தான் எனக் கூறினார் என்றும் காப்பியத் தலைவிகள் இருவரும் நிகரானவர்களே என்றும் பேராசிரியர் தமது உரையில் கூறினார்.

இவ்வழக்காடு மன்றத்தில் கோவலன் குற்றவாளியாக திரு. அ. குமரன், திரு சிவா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் “குற்றவாளி அல்ல” என திரு. திரு. திருநந்தகுமார், திரு. ஈ. ஜெயராஜ் ஆகியோரும் வாதிட்டார்கள். (அ)

## முதலாமிடம்

(சுழிபுரம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான சங்கீத, நடன, நாடகப் போட்டியில் கலந்து கொண்ட சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் பாரம்பரிய இசை நிகழ்ச்சியில் (மேற்பிரிவு) முதலாம் இடத்தையும் புதிய ஆக்கம் இசை நிகழ்ச்சியில் (கீழ்ப்பிரிவு) மூன்றாம் இடத்தையும் பெற்றது.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் இவ்வித்தியாலயம் பாரம்பரிய இசையில் மேல், மத்திய, கீழ்ப் பிரிவுகளிலும் புதிய ஆக்கம் கீழ்ப் பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது (இ)

## துர்க்கா சிந்தனை

சித்தத்தில் சித்தமாச் சித்தத்தில் கெட்டாத
சுத்தத்தில் சுத்தமதாய்ச் சூர்தடியும் -- அத்தனும்
ஆத்தாள் எனவழைக்கும் ஆருயிர்க்குத் துர்க்கையவள்
பூத்தாள் புரமெரிக்கும் பூ.

நோக்கு நலன் காட்டி நோக்கா துளத்துகலா
நாக்கு பலம்விட்டி நோக்குமதே -- நோக்குமுறக்
கொண்டார்க் கரணுங் கொற்ற விசையைபதத்
தொண்டர் தொழும்பதுனத் தோர்.

தாக்கும் மருளையைத்தைத் தக்க ரிணத்திருத்திக்
காக்கும் கருணைமொழி காடுகாள் -- தேக்குசீர்த்
தொண்டு திருக்குலவு தொன்மைத் தவிளக்கங்
கொண்டு குவித்தறமேற் கொள்.

வேதாந் யங்கமெனாம் வேலகலாத் தத்துவமாய்ப்
பூளதி யெல்லாமாய்ப் போதாந்த -- மாதவளாய்க்
கோளிலவாந் திண்ணமதில் கூடலருக் கொற்றமருள்
காளியவள் காடுகாள் காண்.

தாயே தனித்தழகே தானூர் தருமருந்தே
பேயேனே யாளும் பெருநலனே -- தாயே
மருக்கொழுந்தே மூவாத மாதேயரந் துர்க்கா
திருக்கொழுந்தே தேனே திகழ்.

ச. தங்கமாமயிலோன்.

## பொலிஸ் விசாரணையில் கட்டுவன் இளைஞர்

(யாழ்ப்பாணம்)

கட்டுவனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் மிருசுவிலைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.

நேற்று முன்தினம் காலை கட்டுவனிலுள்ள இவரது வீட்டிலிருந்து தெல்லிப்பழைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. (மா)

## அக். 2ம் திகதி சுவரொட்டிப் பிரசாரம்

(பச்சிலைப்பள்ளி)

யாழ் குடாநாட்டில் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வினைக் கண்டித்து அறமுறிப் போராட்டக்குழு குடாநாடு தழுவிய சுவரொட்டிப் பிரசாரத்தினை மகாத்மா காந்தி பிறந்ததினமாகிய எதிர்வரும் 2ம் திகதி நடாத்தவுள்ளது.

## முல்லைத்தீவு தொகுதியில்

# 900 ஏக்கரில் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம்

## 300 இளைஞர்களுக்கு காணி வழங்கப்படும்

(புளியங்குளம்)

சுமார் 300 இளைஞர்களைக் கொண்ட படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம் ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர், ஜனுப் ஏ ஆர் மன்சூர் இதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு ஒஸ்டின் ஜெயவர்தனாவை பணித்துள்ளார்.

துணுக்காய் அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புத்துவெட்டுவான் கிராமசேவகர் பகுதியிலுள்ள ஐயன்குளம் கிராமத்தில் இத்திட்டத்திற்கான 900 ஏக்கர் காணி வழங்கப்படவிருக்கிறது.

இளைஞர் ஒருவருக்குத்தலா 3 ஏக்கர் வீதம் காணி வழங்கப்படும். குடியிருப்பதற்கு ஒரு ஏக்கரும், உப-உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கு நீர்ப்பாசன வசதியுடைய இரண்டு ஏக்கர் காணியும் பகிர்ந்தளிக்கப்படும்.

முல்லைத்தீவு தொகுதியில் நிரந்தரமாக வசிக்கும் இளைஞர்களுக்கே காணி வழங்கப்படும். 18 வயதுமுதல் 30 வயதிற்குட்பட்டவராகவும், 8ம் வகுப்புக்குமேல் படித்தவராகவும், திருமணமாகாதவராகவும் இருக்கவேண்டும்.

மேலும் இவர்களுக்கு காணி வெட்டுதல், திருத்துதல், தற்காலிக குடிசை அமைத்தல், கிணறுவெட்டுதல் போன்ற வேலைகளுக்கென அரசு 4000 ரூபா மானியமாக வழங்கவுள்ளது. [அ]

## நர்த்தனம் புரிந்தனர் ஆடல் நங்கையர்

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு கலைவிழா-- மானிப்பாய் நாட்டியாலயத்தின் ஒன்பதாவது நடன விழா நடைபெற்றது.

“ஆடற்கலையை ஒன்பது ஆண்டுகள் பேணி பல நூற்றுக்கணக்கான ஆடல் நங்கைகளை உருவாக்கியவர் செல்வி விஜேதினி அரசரத்தினம்.


நாட்டிய நிகழ்ச்சிகளின் முதல் அம்சமான அலாரிப்பு இடம் பெற்றது. எட்டுக் குழந்தைகள் தாள லயத்தினை வெளிப்படுத்தி முதல் நிகழ்விலே பாராட்டைப் பெற்றனர், ஜதீஸ்வரம், பதம் ஆகியவற்றைத் தொடர்ந்து சிதம்பர நடேச கௌத்துவம் இடம் பெற்றது.

குழந்தைகளே அதிக நிகழ்ச்சியில் பங்கு கொண்டதால் பெரியவர்கள் அனைவரும் தம்மை அறியாமலே ஆரவாரம் செய்து மகிழ்வித்தனர், வர்ணந்த நடனம், தீபகரித்தா. காவடி, இவைகள் அனைத்தும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சியாகவிருந்தது,

இக்கானுவில் பங்குகொண்ட

(6ம் பக்கம் பார்க்க)


ஜெம்



ஜெம் மோட்டார்கள்

- 20,000-க்கும் அதிகம் பாவனையில் உள்ளன.
- பாதுகாப்புக்காக முற்றிலும் கவசம் கொண்டவை
- மேற்கு ஜேர்மனி உற்பத்தியாளர்களின் கூட்டிணைப்புடன் தொழில் நுட்ப ரீதியில் முற்றிலும் உயர்ந்த தாரதரப்படி உருவானவை.
- எங்கள் புகழ் பெற்ற விற்பனைப்-பின்-சேவையின் பின்-பலம் கொண்டவை.

விலை: ரூ. 1,575/- முதல்.
½ முதல் 15 குதிரைச் சக்தி ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன எலக்ட்ரிக் மோட்டார்ஸ் லிமிட்டெட்,
4, உனுப்பிட்டியா வீதி, கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

ஜினசேன லிமிட்டெட் கம்பனியின் ஒரு கூட்டு நிறுவனம்.

Mel Ads.

## கருணாநிதிக்கு விடுதலை கோரி

# தீக்குளிக்க முயன்றவர் கைது!
# பெண் தொண்டர்கள் உண்ணாவிரதம்

சென்னை, செப். 29
தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதியை உடன் விடுதலைசெய்யுமாறு தமிழக அரசைக் கோரி, மேலும் ஒருவர் தீக்குளிக்க முற்பட்ட போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். கடந்த சில தினங்களாகத் தமிழ்நாட்டில் தீக்குளிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவது தெரிந்ததே

ஏற்கனவே மூவர் தீக்குளித்து மரணமானார்கள். மூவர் எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறையிலுள்ள தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் விடுதலைக்காக வன்முறையைத் தூண்டியதாகத் தி. மு. க துணைச் செயலாளர் திரு. தாவூத் மதுரையில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை மதுரையில் உள்ள கலெக்டர் காரியாலயத்திற்கு முன்பு தி. மு. க. பெண் தொண்டர்கள் நேற்று உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர். தி. மு. க. தொண்டர்கள்: தி. மு. க. எம். எல். ஏ.க்கள், எம். பிக்கள் ஆகியோரும் சேலத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் கலைஞர் கருணாநிதியின் விடுதலையைக் கோரி, உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாகப் பெண்கள் இதில் அதிக பங்கெடுத்துவருகின்றனர். (கு-அ)

## இந்துசமய பிரச்னைகள்

சென்னை, செப் 29
இந்துசமய மன்றங்களுக் கேற்படும் பிரச்னைகளை ஆராய தமிழ்நாடு அரசு, அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் தலைமையில் குழுவொன்றை நியமித்துள்ளது.

காஞ்சி காமகோடி சங்கராச்சாரியார், மேலவைத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணியார், மூன்று உயர் உயர்நீதிமன்ற நீதிபதிகள், பல மடாதிபதிகள் உட்பட 37 பேர் இக்குழுவில் அங்கம்வகிக்கின்றனர். (கு)

கிளிநொச்சி

## காணிக்கந்தோரில் வேலைகள் தாமதம்

(மாழ்ப்பாணம்)

இடமாற்றம் செய்யப்பட்ட இடங்கள் நிரப்பப்படாததனால் அரசாங்க காரியாலயங்களில் வேலைகள் பாதிப்படைந்துள்ளன.

கிளிநொச்சியிலுள்ள காணிக் கந்தோரிலிருந்து பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் இடங்களுக்கு வேறு எவரும் இதுவரை நியமிக்கப்படாததனால் காரியாலயத்தில் வேலைகள் தாமதமடைந்து வருவதாகத் தெரிகிறது.

பர்மிட் காணிகளுக்கு உறுதி வழங்கும் வேலைகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் இக் காரியாலயத்தில் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பணி தற்காலிகமாக மேற்படி காரியாலய வேலைகளைக் கவனித்துவருகின்றனராம். (கொ-அ)

## யாருடையது?

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் பழுதடைந்த இ. போ. சபை பஸ்ஸில் தவறிவிடப்பட்ட இறப்புக் கோர்வை ஒன்று நாவலடியைச் சேர்ந்த இன்னம்மா நல்லதம்பி என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## வன்செயலில் ஈடுபடுவோரை சுட்டுக் கொல்லுமாறு உத்தரவு
### 110 இடதுசாரி தீவிரவாதிகளுக்கு மரணதண்டனை

தெஹ்ரான், செப். 29
ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுப் புரட்சி நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 110 இடதுசாரித் தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

வன்செயல்களில் ஈடுபட்டவர்கள் நேற்றும் கைதுசெய்யப்பட்டு உடனடியாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நிலைமை எவ்வாறிருக்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு ஈரான் முன்னாள் ஜனாதிபதி பானிசதர் பாரிஸில் இருந்த நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

"குழப்பம் விளைவிப்போர், வன்செயல்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு உடன் சுட்டுக் கொல்லப்படுவார்கள்" என்று அரசாங்க வழக்குத் தொடுநர் திரு. மூசாவி பகிரங்கமாக அறிவித்தல் விடுத்துள்ளார். (கு)

## நியூட்ரன் குண்டுபற்றி பேச்சுவார்த்தை

ஹொங்கொங். செப் 29
அமெரிக்கத் துணைப் பாதுகாப்புக் காரியதரிசி திரு. பிராங்க் கார்லுக்கி, ஆசிய நாடுகளுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் அரசியல் வட்டாரங்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. அவர் ஏற்கனவே மணிலாவுக்கு விஜயஞ் செய்துள்ளார்.

றேகன் நிர்வாகம் பதவிக்கு வந்த பின்னர் இந்த அந்தஸ்து பெற்ற ராஜியப் பிரமுகர் ஒருவர் இப்பிராந்தியத்திற்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

கார்லுக்கி, ஆசிய, பசுபிக் பிராந்தியத்திலுள்ள அமெரிக்க ராணுவத் தளங்களைப் பார்வையிடவும், அரசியல் ராணுவத் தலைவர்களுடன் பேச்சு நடத்தவும் வருவதாக வாஷிங்டன் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

ஜப்பானில் 120 அமெரிக்க ராணுவத் தளங்களும் 45,000 துருப்புகளும், தென்கொரியவில் 40,000 துருப்பினரும், விமானங்களும் போர்க் கப்பல்களும் உள்ளன. மேலும் 14,000 துருப்புக்களை வைத்துள்ள பிலிப்பைன்ஸ் ராணுவத் தளங்களைப் பாவிக்கும் சலுகையும் அமெரிக்காவுக்கு உள்ளது. அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கப்பல்கள் றேகன் நிர்வாகம் பதவிக்கு வந்த பின்னர் பிலிப்பைன்ஸ் துறைமுகங்களுக்கு வருவது சாமான்யமாகிவிட்டது.

திரு கார்லுக்கி. நியூட்ரோன் குண்டு விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

ஒரு கிலோ டொன் நியூட்ரோன் குண்டு வெடிக்கும்போது 150-300 மீட்டர் தூரத்தில் உள்ள கட்டடங்கள் யாவும் நாசமாகும். 800 மீட்டர் தூரத்திலுள்ள மக்கள் அனைவரும் மடிவர். செறிவாக மக்கள் வாழும் ஆசிய நாடுகளில் நியூட்ரோன் குண்டின் அழிவு நாசம் படுமோசமாய் இருக்கும்.

## யானை அடித்து சைக்கிள் வாலிபர் பலி

(மன்னார்)

சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் யானையினால் தூக்கியடிக்கப்பட்டு அந்தஇடத்திலேயே மரணமானார்.

மடுவீதி ஆலங்குளம் என்னுமிடத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆலங்குளம் பகுதியைச்சேர்ந்த சுமார் 30 வயதுடைய வாலிபர் ஒருவரே மரணமானவராவார்.

மடுவீதியிலிருந்து ஒரு சைக்கிளில் இருவர் ஆலங்குளத்தை நோக்கிச் சென்றபோது யானை ஒன்று வீதியின் குறுக்கே நின்றதாகவும், இதனால் சைக்கிளில் வந்த இருவரும் திரும்பிச் சென்று சற்றுத் தூரத்தில் நின்று பார்த்தபோது யானை காட்டிற்குள் சென்றுவிட்டதாகவும், யானை காட்டிற்குள் சென்றதால் இருவரும் திரும்பி ஆலங்குளத்தை நோக்கி வந்தபோது வீதியின் அருகே காட்டிற்குள் நின்றயானை வீதிக்கு வந்து சைக்கிளைச் செலுத்தி வந்தவரை தூக்கியடித்துக் கொன்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சைக்கிளின் பக்கத்தில் இருந்து வந்தவர் தப்பி ஓடிவிட்டார். சைக்கிலும் யானையினால் சேதப்படுத்தப்பட்டது

## நர்த்தனம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நங்கையர்கள் எத்தனையோ அசைவுகளை சப்த நயத்தோடு பாவமாக எடுத்துக்காட்ட தயங்கவில்லை. நடன நிகழ்ச்சிகளில் அழகும் நிரம்பிவாய்ந்த அம்சமாக இல்லாறு இடம்பெற்றது.

பின்னணி வழங்கிய பலரும் மேடைகளுக்கு புதியவர்களல்ல, புகழோடு இசையுலகிற்கு அறிமுகமானவர் ஆட்டத்திற்களில் மேடையில் நிகழ்த்தப்பட்ட "பொட்டெனி" அழகினை மேலும் சோபிக்கச் செய்தன. நாட்டிய நிகழ்ச்சிகள் தெய்வ பக்தியையும் அழகுணர்ச்சியையும் தன்னடக்கத்தையும் புராண இதிகாச சரித்திர வரலாறுகளையும் மக்கள் மனதில் புகட்டுவதாக அமைகின்றன.

—ஸச்சி





வயலில் உள்ள களைகளைக் கட்டுப்படுத்தியதால் நான் பெருவாரி விளைச்சலைப் பெற்றுக் கொண்டேன்

● ஒரு முறை மாத்திரமே உழவேண்டியதால் இருமுறை உழுவதற்கு போகும் செலவு மிகுதியாகிறது ● எல்லாக் களைகளையும் கட்டுப்படுத்துகிறது. ● நிலத்தை இழகப்பண்ணி மண்ணில் உள்ள பசளையைப் பாதுகாக்கின்றது.
● கிரமக்சோன் பாவித்தால் வருடத்தில் மூன்றுமுறை பயிர் செய்ய முடியும்.

கிரமக்சோன் முறையைப்பற்றி மேலும் விபரங்கட்டு எமக்கு எழுதுங்கள்.

இத்துடன் இணைக்கப்பட்ட கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பவும். உங்களுக்கு வேண்டிய உதவிக்கு எமது சேவையாளரை அனுப்புவோம்.

கூப்பன்
பெயர் ..................
விலாசம் ..................
..................
வேண்டியசேவைகள ..................
..................

ⓇG

CIC கெமிக்கல் இண்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 352 கொழும்பு 1

நிகர அளவு 450 மி லீ. சில்லறை விலை ரூ. 37-50

# ஐ.நா.வில் குரல் எழுப்ப

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீர் தமிழக மக்களின் உணர்வைத் தட்டி எழுப்பி விட்டது என்றே கூறவேண்டும்.

இலங்கையின் அரசியல் விவகாரங்களை முற்று முழுதாக அறிந்திராத நிலையிலும் கூட எமது மக்கள் இன உணர்வினால் உந்தப்பட்ட நிலையிலேயே ஹர்த்தாலை அனுஷ்டித்தார்கள்.

ஹர்த்தால் அனுஷ்டிப்பதினால் தமிழகத்திற்கு ஒரு நாளுக்கு மட்டும் 50 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும் என்று தமிழக ஆங்கில பத்திரிகை ஒன்று ஹர்த்தாலுக்கு முன் செய்தி வெளியிட்டிருந்தது. 50 கோடி என்ன 100 கோடி நஷ்டம் ஏற்பட்டாலும் இலங்கைத் தமிழ் மக்களுக்காக நாம் இதனை அனுஷ்டிக்கவேண்டும் என்ற தீவிர மனப்பான்மையுடனேயே தலைவர்களும் இதில் கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது.

ஹர்த்தால் குறித்த பிரேரணையை நான் முதன் முதலில் சட்டமன்றத்தில் சமர்ப்பித்து விட்டு எமது முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்தேன். இப்பிரேரணைக்கு அவருடையதும் கட்சி உறுப்பினர்களினதும் பூரண ஆதரவு இருந்தது.

இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையே நடைபெற்ற உயர் மட்ட பேச்சுவார்த்தைகள் தமிழகத்தில் எவ்வாறு பிரதிபலித்தன' என்று கேட்டபோது அவர் கூறுகிறார்-

'எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கத்தை அவரது பதவியிலிருந்தும் பாராளுமன்றத்திலிருந்தும் வெளியேற்ற பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தவர்களே அவரை அழைத்து சமாதானப் பேச்சு நடத்த முற்பட்டமை தமிழகத்தில் தம் நடத்திய ஹர்த்தாலின் பிரதிபலிப்பே என்று தமிழக மக்கள் நம்புகின்றனர்''

இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்னையில் இந்தியப் பிரதமர் தலையிடுவாரா? என்று கேட்டேன்

புன்முறுவலுடன் பின்வருமாறு கூறுகிறார்;

''இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகளை திருமதி காந்தி நன்ருக அறிந்து வைத்திருக்கிருர். பங்களாதேஷ் பிரச்னையில் தலையிட்டதுபோல் இலங்கைத் தமிழர் பிரச்னையிலும் அவர் தலையிடுவாரா எனப்பலரி கேட்கிருர்கள். இதில் தலையிட்டால் தமது நாட்டிலும் ஒரு பெரும் அரசியல் சிக்கல் ஏற்படுமென்று திருமதி காந்தி அச்சம் கொள்கிருர் போலும். இது எனது சொந்தக்கருத்து''

''மாத்தறையில் தமிழக உல்லாசப்பயணி திரு. தனபதி கொலை செய்யப்பட்ட வேளையில் இலங்கைக்குவரும் இந்தியத் தமிழர்கள் எல்லோருமே கொலை செய்யப்படுவார்கள் என்ற அச்சம் அங்கு நிலவிவந்தது'' என்று கூறிய திரு. நெடுமாறன்—

''நான் இங்கு வந்தபோது கூட என்னை வரவிடாது தடுத்துவிடுவார்கள் என்ற எண்ணத்துனுல் பலரிடம் கூருமலேயே வந்தேன். ஆனல் இங்கு வந்த பின்னர்தான் இந் நாட்டில் அப்படியானதொரு மோசமான நிலை இப்பொழுது இல்லைஎன்பதை நேரில்அறிந்து கொண்டேன். இலங்கைதத்தமிழர் பிரச்னையை ஐ.நா.வுக்கு கொண்டுசெல்ல இந்தியாவினுல் மட்டுமே முடியும். இந்தியாவைவிட்டு வேறு எந்த நாடோ அல்லது வல்லரசோ ஐ. நா. வில் குரலெழுப்பும் என்று எதிபார்க்கமுடியாது வல்லரசுகளை நம்பியும் பயனில்லை.'' என்று திரு. நெடுமாறன் கூறிஞர்.

# ''யாழ். மாவட்டத்தின் ஆசிரியர் பற்ருக்குறை கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தும்''

## அமிர் அச்சம்

[பண்டத்தரிப்பு]

''யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்ருக்குறை எமது மாணவ சமுதாயத்தின் கல்வியில் வருங்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவுள்ளது. சுமார் 1500 ஆசிரியர் வெற்றிடங்கள் இது வரை யாழ் மாவட்டத்தில் நிரப்பப்படாது இருக்கின்றது. இதே வேளையில் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு சுமார் 27 ஆயிரம்பேருக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கியுள்ளது. இவர்களில் சுமார் ஆயிரத்து அறுநூறு பேரே தமிழர்கள். அண்மையில்கூட தென்னிலங்கையில் இரு தேர்தல் தொகுதிகளில் மாத்திரம் ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.''

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் உடுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற பெற்ருேர் தின விழாவிலும், கலைவிழாவிலும் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பாடசாலை அதிபர் திரு. நடராசா அதிபர் அறிக்கை சமர்ப்பித்து உரைநிகழ்த்தினர்.

...கரப்படுத்தல். ...டம் மாத்திரமல்ல ஏனைய துறைகளிலும் தமிழ் மாணவ சமுதாயம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. பாடசாலைக்கு போதுமான ஆசிரியர்கள் மிக்கப்படவில்லை

மானிப்பாய் எம். பி. வி. தர்மலிங்கமும் உரையாற்றினர்.

[...]

# யாழ். ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டார்.

பொதுமக்கள் முன்னிலையில் நாங்கள் செல்ல முடியாதநிலையில் இருக்கிருேம். மக்கள் சுமத்தும் குற்றம் எங்களையும், மாநகரசபையையும், எமது கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியையும்தான் சேரும் என்றும் திரு. செல்லத்துரை சொன்ஞர்.

திரு; செல்லத்துரை பேசிக்கொண்டிருக்கும் பொழுது மாநகர சுகாதாரப்பகுதியினர் சபையில் பிரசன்னமாயிருப்பதையும் சுட்டிக்காட்டியபோது சபை முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் ''அவர்கள் சபை உறுப்பினர்கள் சொல்லும் குறைகளை நிவர்த்தி செய்யத்தான் இருக்கிருர்கள்'' என்ருர்.

திரு. செல்லத்துரை தொடர்ந்து மாநகரசபை ஊழியர்கள் மேல் பலவிதமான குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டிருக்கும் பொழுது அங்கு இயங்கிக்கொண்டிருந்த மின்சார விசிறியில் மின்னெழுக்கு ஏற்பட்டு புகைகிளம்பியதை சபையில் பார்வையாளர் பகுதியிலிருந்த சுகாதாரப் பகுதி ஊழியர் ஒருவர் அவதானித்து அதனை சபை முதல்வரின் கவனத்துக்குக்கொண்டு வந்தார். உடன் மாநகரசபைக் கட்டடத்தின் மின்சார பிரதான 'சுவிச்' நிறுத்தப்பட்டு சீர்செய்யப்பட்டது.

திரு. சு. சண்முகராசா பேசுகையில் தியணைப்புபடை, சுகாதார வைத்திய அதிகாரிகள் அறிக்கைகள் 2 மாதகாலமாகியும் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லையென்றும் மாநகர சபை விதிப்படி உறுப்பினர்களின் கடிதங்களுக்கு ஒரு கிழமைக்குள் பதில் அனுப்பவேண்டும் என்றிருக்கிறது ஆனல் இது விஷயம் அனுசரிக்கப்படவில்லையென்றும் சொன்ஞர்.

இக்கூட்டத்துக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் ஒருவர் மாத்திரம் தான்வந்திருந்தார். [மா]

# கொழும்பில்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை வந்தவ்னர்.

மகாராணியின் பாதுகா... நடவடிக்கைகள் குறித்து ஆ... யும் பொருட்டே இவர்... இங்கு வந்துள்ளனர்.

இதேவேளையில் மகாரா... யின் பாவிப்புக்காக ,கடி... கார் ஒன்று இறக்குமதி ... யப்பட்டுள்ளது.

# இந்திய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காரர்கள் சீக்கியர்க... இருக்கலாம் என்று ஏஜ... செய்திகள் தெரிவிக்கின்...

இந்தியப் பிரதமர் தி... இந்திராகாந்தி, காமன்வெ... மகாநாட்டில் கலந்துகொ... ளும் பொருட்டு இன்று ... போர்ன் வந்து சேர்ந்தபோ... அவருக்குக் கிடைத்த முத... செய்தி இந்திய விமானக் கடத்... தல்செய்தியாகும்.

பிரதமர் காந்தி ஓரளவு கலவரமடைந்ததாக காணப்பட்டார்.

## நயினை ஆலய விவகாரம்

# நீதிமன்றத்தை அவமதித்தனராம்

## ஐவருக்குப் பிணை

[ஊர்காவற்றுறை]

நயினதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய பாலஸ்தாபனம் சம்பந்தமாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி விடுத்த இடைக்காலத் தடை உத்தரவை மீறியதன்மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட, ஆலய தர்மகர்த்தாக்கள் நால்வரும் 'குருக்கள்' ஒருவரும் இன்று ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. என். நலனுல் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆலய தர்மகர்த்தாக்களான சட்டத்தரணி க. கதிரவேலுப்பிள்ளை, ஆ. சபாநாதன், ரி. கே. மகாலிங்கசிவம், சட்டத்தரணி தி. திருநாவுக்கரசு, சிவஸ்ரீ சு. பரமேஸ்வரக்குருக்கள் ஆகியோர் நீதிபதியின் இடைக்காலத் தடை உத்தரவை மீறி, நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நேற்று எடுக்கப்பட்டபொழுது வழக்கின் மனுதாரரான கோப்பாய் மு. பரமசாமிக்குருக்கள் சார்பில் சட்டத்தரணிகள் என். பத்மநாதன், எஸ். கே. மகேந்திரன் ஆகியோர் ஆஜராகினர்.

எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகள் என் சிறீகாந்தா, திருமதி இளங்கோவன் ஆகியோர் ஆஜராகினர்.

குற்றச்சாட்டிலுள்ள உண்மையை குறித்த 5 எதிர் மனுதாரரும் எதிரிக் கூண்டிலிருந்து மறுதலிப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, முதல் நால்வரையும் 1000 ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணையில் அல்லது 500 ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி, 5 வது எதிர்மனுதாரரான பரமேஸ்வரக் குருக்களை சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை நவம்பர் 27 ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். [மா-இ]

# நெடுமாறனுக்கு..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் இவ்வைபவம் நடைபெற்றது.

மாநகராட்சிமன்ற அழைப்பிதழ் உள்ளவர்கள்மட்டுமே இவ்வுபசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. ஆலாலசுந்தரம், மாநகரசபை உறுப்பினர்கள் திரு. துரைராஜசிங்கம், ஜனாப் இமாம், மாவட்ட சபைத்தலைவர் திரு. சு. நடராசா, எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், மாநகர ஆணையாளர் திரு. எஸ் சிவஞானம் ஆகியோர் திரு. பி. நெடுமாறனைப் பாராட்டிப் பேசினர்.

அமரர் செல்வாவின் நினைவாலயத்திற்கும் திரு நெடுமாறன் சென்று அஞ்சலி செலுத்திஞர். மா

# நாளை நூல் வெளியீடு

[யாழ் பாணம்]

'மார்சியமும் இலக்கியமும் - சில நோக்குகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மாலை யாழ். ட்றிமர் மண்டபத்தில் திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் திரு சு வில்வரத்தினம், திரு. எம். ஏ. நுஃமான், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர் நூலை விமர்சிப்பர்,

மார்க்ஸிய ஆய்வறிவாளர்களான திருவாளர்கள்- அலன்ஸ் விஞ்ச் உட், றெஜி சிறிவர்த்தன, பொர்சன் ஆகியோரின் கட்டுரைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலத்திலிருந்து இவற்றைத் தமிழாக்கியவர் திரு ஏ. ஜே. கனகரத்தின ஆவர்

இந்நூல் இலக்கிய சஞ்சிகையான 'அலை' வெளியீடாகும்.

# 10 பேர் மரணம்

புதுடில்லி, செப். 29

கர்நாடகத்தில் நிகழ்ந்த படகு விபத்தில் 10 பேர் கடலில் மூழ்கி மரணமாஞர்கள்.

இப்படகில் 19 பேர் பிரயாணம் செய்தனர். [கு]


ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
உல்லாச பஸ் சேவை
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்.
இல: 82, கன்ஞதிட்டி வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ்: மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 7596.
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை
J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866
டிக்கட் விலை: ரூபா 65-00



வெளிநாடுகளில் தொழில்கள்
[illegible]-வெல்டிங் (Arc & Gas), வயறிங் (I. E. E. முறைப்படி),
RADIO OFFICERS (P. M. G) முதலிடன.
NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
57, 1/9 பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி. 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 608ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 30-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper The General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8186.